# கம்பம் நகராட்சி

**2022-ஆம் ஆண்டு ஜுலை மாதம் (29.07.2022)-ஆம் நாள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கம்பம் நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்றத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் சாதாரணக்கூட்டம்**

## கூட்டப்பொருள்

| | |
|---|---|
| 1) | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 06/2022-ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். |
| | தீர்மான எண். 96 பதிவுசெய்யப்பட்டது. |
| 2) | நகராட்சி பொறியாளர் அவர்களின் 06/2022-ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். |
| | தீர்மான எண். 97 பதிவுசெய்யப்பட்டது. |
| 3) | இந்நகராட்சியில் நிலைக்குழு வழக்கறிஞராக பணியாற்றி வந்த திரு.இரா.காந்தன் என்பவர் தனது சூழ்நிலை காரணமாக தாம்பார்த்து வந்த நிலைக்குழு வழக்கறிஞர் பணியினை இராஜினாமா செய்வதாக தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து புதிதாக வழக்கறிஞர் நியமனம் செய்வது அவசியமாகின்றது. இந்நிலையில் திரு.க.ஈஸ்வரன், எம்.ஏ.எல்.எல்.பி., த/பெ. கருத்தப்பாண்டியன் 15/73 கோசேந்திர ஓடை, கம்பம் (வழக்கறிஞர் பதிவு எண்.1551/2009) என்பவர் நகராட்சி நிலைக்குழு வழக்கறிஞராக பணியாற்றிட விருப்பம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளதால், உத்தமபாளையம் மற்றும் தேனி மாவட்ட நீதிமன்றங்களில் கம்பம் நகராட்சிக்கான வழக்குகளில் ஆஜராகும் வகையில் நகராட்சி நிலைக்குழு வழக்கறிஞராக நியமனம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1288/2022/சி1) |
| | தீர்மான எண். 98 அனுமதிக்கப்பட்டது. |
| 4) | கம்பம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி, கம்பம் நகராட்சிக்கு சொந்தமான கம்பம்-குமுளி சாலையில் அமைந்துள்ள உரக்கிடங்கில் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2018-2019-இன்கீழ், ரூ.410.00 இலட்சம் மதிப்பீட்டில் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது. மேற்காணும் கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் செயல்பாட்டிற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி பெறும் பொருட்டு (Consent to Operate) கட்டணத்தொகை ரூ.43,600/-ஐ தேனி மாவட்ட தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணியின் அவசர, அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2121/2019/இ1) |
| | தீர்மான எண். 99 அனுமதிக்கப்பட்டது. |
| 5) | இந்நகராட்சிக்கு சொந்தமான லோயர் கேம்ப் நீரேற்று நிலையத்திலிருந்து 18 கி.மீ தொலைவில் குடிநீர் பம்பிங் செய்து கம்பம் நகருக்கு 7.43 MLD குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது D.I Pumping பைப்புகளில் பொருத்தப்பட்டுள்ள Air வால்வுகள் அடிக்கடி பழுது ஏற்படுவதால் புதிதாக Air வால்வுகள் 7 எண்ணம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,25,000/- குடிநீர் நிதி 2022-2023-இன்கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2022-2023-இன்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1333/2022/இ2) |
| | தீர்மான எண். 100 அனுமதிக்கப்பட்டது. |
| 6) | **கம்பம் நகராட்சி பகுதிகளில் பொது மக்களிடம் மாண்புமிகு** |

| | |
|---|---|
| | **தமிழக முதலமைச்சரின் சிறப்பு திட்டமான " மீண்டும் மஞ்சப்பை " நெகிழி பயன்பாட்டை தவிர்த்து மஞ்சப்பை முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு ஏற்படுத்திட மல்டி கலர் நோட்டீஸ்கள், ஸ்டிக்கர்கள் மற்றும் கொரோனா விழிப்புணர்வு குறித்த முகக்கவசம் கட்டாயம் மல்டி கலர் ஸ்டிக்கர்கள் பிரிண்டிங் செய்து சப்ளை செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5,00,000/-ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.** |
| | **அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.** |
| | தீர்மான எண். 101 அனுமதிக்கப்பட்டது. |
| 7) | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE - வாகன எண். TN 60 AW 8375-இல் பேட்டரி மற்றும் வயரிங் பழுதாகி உள்ளதால், மேற்படி பழுதினை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.15,000/-ஐ மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு. |
| | அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம். 2) மேற்காணும் வாகனத்தின் பழுதினை சரிசெய்வதற்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | தீர்மான எண். 102 அனுமதிக்கப்பட்டது. |
| 8) | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் JCB வாகன எண். TN60 AU 9643-ற்கு 1500 மணி நேரம் வாகனம் இயங்கியுள்ளது. எனவே மேற்படி வாகனத்தினை ஆயில் சர்வீஸ் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.20,000/-ஐ மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு. |
| | அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம். 2) மேற்காணும் வாகனத்தை ஆயில் சர்வீஸ் செய்வதற்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | தீர்மான எண். 103 அனுமதிக்கப்பட்டது. |
| 9) | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி எண்.TN.60Y1959ற்கு எதிர்வரும் 28.06.2022 உடன் தகுதிச்சான்று காலம் முடிவடைதால் தகுதிச்சான்று பெறும் பொருட்டு மராமத்து பணிகளை செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.210000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு. |
| | அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம். 2) மேற்காணும் வாகன மராமத்து பணிகளை செய்வதற்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | தீர்மான எண். 104 அனுமதிக்கப்பட்டது. |
| 10) | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் கழிவுநீர் அகற்றும் லாரி எண். TN60Z 3591-ற்கு எதிர்வரும் 28.06.2022 உடன் தகுதிச்சான்று காலம் முடிவடைவதால் தகுதிச்சான்று பெறும் பொருட்டு மராமத்து பணிகளை செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.100000/-ற்கு (ரூபாய் ஒரு இலட்சம்) மன்றத்தின் அனுமதிக்கு. |
| | அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம். 2) மேற்காணும் வாகனத்தை மராமத்து பணிகளை செய்வதற்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும்மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண்.1316/2022/எச்1) |
| | தீர்மான எண். 105 அனுமதிக்கப்பட்டது. |
| 11) | இந்நகர்மன்ற தீர்மான எண்.2457 நாள்.24.01.2022-இல் அனுமதிக்கப் பட்டுள்ளபடி, கம்பம் நகராட்சி பகுதியில் உள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பிடங்களை (7 நகராட்சி பள்ளிகள் 4 அரசு பள்ளிகள்) சுத்தம் மற்றும் வளாக தூய்மைப்படுத்துதல் போன்ற பணிகள் SUN (TAMIL NADU) SECURITY Management |

Services Private Ltd நிறுவனத்தினருக்கு 01.04.2022 முதல் 30.04.2022 வரை ஒரு மாதத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது மதுரை SUN (TAMIL NADU) SECURITY Management Services Private Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.05.2022 முதல் 31.05.2022 வரை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விகிதத்தில் பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நிர்வாக நலன் கருதியும் பொது சுகாதார நலன் கருதியும் துப்புரவு பணிகள் பாதிப்படையாமல் இருப்பதற்கு ஏதுவாக தற்போது துப்புரவு பணியாளர்களை வழங்கு வரும் மதுரை SUN (TAMIL NADU) SECURITY Management Services Private Ltd நிறுவனத்துடன் செய்துள்ள ஒப்பந்தத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு (01.05.2022 முதல் 31.05.2022) நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண். 106 அனுமதிக்கப்பட்டது.

12) கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN 60 AV 2496 எண் கொண்ட TATA ACE - வாகனத்தில் பிளாட் பாரம், கிளர்ச் பிளேட் பழுதினை சரி செய்யவும் மற்றும் குட்டி டாப் மற்றும் சைடு கண்ணாடி மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்காணும் பழுதினை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.35,000/-ஐ மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்காணும் வாகனத்தின் பழுது பணி செய்வதற்கு உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.35,000/-க்கு (ரூபாய் முப்பத்தைந்தாயிரம் மட்டும்) மன்றம் அனுமதிக்கும், மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும்மன்றம்அனுமதிக்கலாம். (ந.க.எண். 1454/2022/எச்1)

தீர்மான எண். 107 அனுமதிக்கப்பட்டது.

13) கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் வாகனங்களுக்கு 2021-2022-ஆம் ஆண்டிற்கான வாகன காப்பீடு எதிர்வரும் 26.08.2022 தேதியுடன் முடிவடைவதால் கீழ்காணும் வாகனங்களுக்கு 2022-2023-ஆம் ஆண்டிற்கான வாகன காப்பீடு செலுத்த ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.199283/-ற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து இருநூற்று என்பத்து மூன்று மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு.

| வ.எண். | வாகன எண் | வாகனத்தின் பெயர் | காப்பீட்டு தொகை ரூ |
|---|---|---|---|
| 1) | TN60T 4507 | டிப்பர் லாரி | 31943 |
| 2) | TN60Z 3591 | கழிவுநீர் வாகனம் | 30595 |
| 3) | TN60Y 1959 | டிப்பர் லாரி | 18122 |
| 4) | TN60AW 8353 | டாடா ACE | 19727 |
| 5) | TN60AW 8375 | டாடா ACE | 19589 |
| 6) | TN60AW 8347 | டாடா ACE | 19727 |
| 7) | TN60AV 2482 | டாடா ACE | 19860 |
| 8) | TN60AV 2490 | டாடா ACE | 19860 |
| 9) | TN60AV 2496 | டாடா ACE | 19860 |
| | மொத்த தொகை | | **199283** |

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்காணும் வாகனங்களுக்கு காப்பீடு தொகை செலுத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1455/2022/எச்1)

தீர்மான எண். 108 அனுமதிக்கப்பட்டது.

14) இந்நகராட்சிக்கு சொந்தமான JCB TN60 AU 9643 வாகனத்திற்கு காப்பீடு காலம் 12.04.2022-ஆம் தேதி உடன் முடிவடைந்துவிட்டது. எனவே, மேற்காணும்

| | |
|---|---|
| | வாகனத்திற்கு HDFCERGO Tractor Insurance என்ற நிறுவனத்திற்கு காப்பீடு புதுப்பிப்பு கட்டணத்தொகை ரூ.17,613/-ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப் படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர, அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன்அனுமதியை எதிர்நோக்கி மேற்காணும் செலவினத்தொகையினை பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | தீர்மான எண். 109 அனுமதிக்கப்பட்டது. |
| 15) | இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண்.TN60V 2194 வாகனத்திற்கு காப்பீடு காலம் 25.08.2022-ஆம் தேதி உடன் முடிவடைகிறது. எனவே மேற்காணும் வாகனத்திற்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கம்பம் என்ற நிறுவனத்திற்கு காப்பீட்டு புதுப்பித்தல் கட்டணத் தொகை ரூ.12,177/- ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| | தீர்மான எண். 110 அனுமதிக்கப்பட்டது. |
| 16) | கம்பம் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை மற்றும் மன்றப்பொருள் 05/2022 மற்றும் 06/2022-ஆம் மாதங்களுக்கு 60 set வீதம் நகல் எடுத்த வகையில் செலவினத் தொகை ரூ.3780/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு<br>1) நகர்மன்ற உறுப்பினர் அடையாள அட்டை = 33 X ரூ.60 = ரூ.1980<br>2) மே மாத மன்றப்பொருள் = 16 X 60 Xரூ1 = ரூ. 960<br>3) ஜூன் மாத மன்றப்பொருள் = 14 X 60 Xரூ1 = ரூ. 840<br>---------------------------<br>**ரூ. 3780**<br>-------------------------- |
| | அலுவலகக்குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) 07/2022-ஆம் மாதத்திற்கான நகர்மன்ற கூட்டப் பொருள் அச்சிடுவதற்கான உத்தேச செலவினம் ரூ.1000/-ற்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்.1381/2016/பி1) |
| | தீர்மான எண். 111 அனுமதிக்கப்பட்டது. |
| 17) | இந்நகராட்சி குமுளி ரோடு உரக்கிடங்கில் கழிவு பிளாஸ்டிக்குகளை பண்டல் செய்ய பயன்படுத்தப்படும் இயந்திரத்தில் உள்ள 5 எச்.பி.திறன் கொண்ட மின் மோட்டார் மற்றும் ஆங்கூர்பாளையம் ரோடு MCC மையத்தில் மக்கும் கழிவுகளை அரைக்கும் பழைய இயந்திரத்தில் உள்ள 10HP திறன் கொண்ட மின்மோட்டார் ஆகிய இரண்டு மின் மோட்டார்களும் காயல் பழுதடைந்து இயங்காமல் உள்ளதை, புதியதாக ரீ வைண்டிஸ் செய்து இரண்டு பேரிங்குகள் வீதம் மாற்றம் செய்து சாப்ட் வெல்டிங் செய்து கடைசல் பணிகள் மேற்கொண்டு சரிசெய்து இயக்க ஆகும் உத்தேச செலவினம் GST வரிகள் உட்பட ரூ.24000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1454/2022/இ2) |
| | தீர்மான எண். 112 அனுமதிக்கப்பட்டது. |
| 18) | **கம்பம் நகராட்சி வார்டு எண்.15 மற்றும் வார்டு எண்.20 ஆகிய இரண்டு வார்டுகளும் சந்திக்கும் பஜார் தெரு சூப்பர் ஸ்டோர் அருகில் உள்ள சிறுபாலமானது பல வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டு தற்போது மழைநீர் செல்ல முடியாதவாறு பழுதடைந்து உள்ளது. மேலும் ஓடைக்கரைத்தெருடிவில் அமைந்துள்ள மழைநீர் வடிகாலும் பழுதடைந்து மழைநீர் செல்ல முடியாதவாறு அமைந்துள்ளது. மேற்படி மழைநீர் வடிகாலானது நந்தகோபால்சாமி நகர்,சுங்கம் தெரு போன்ற பகுதிகளிலிருந்து வருகின்ற மழைநீர் வடிகாலாகும். எனவே ஓடைத்தெரு மற்றும் சூப்பர் ஸ்டோர் அருகில் உள்ள சிறுபாலம், மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.** |
| | **அலுவலகக்குறிப்பு** : 1) **மன்றம் அனுமதிக்கலாம்.**<br>2) **மேற்படி செலவினத்தை** 2022-2023-**ஆம் ஆண்டு பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.** |

| | |
|---|---|
| | தீர்மான எண். 113 அனுமதிக்கப்பட்டது. |
| 19) | **கம்பம் நகராட்சி வார்டு எண்.27 பசும்பொன் முத்துராமலிங்கம் தேவர் தெரு, E.B அலுவலகம் நகராட்சி எல்லைக்கு அருகில் உள்ள பொதுமக்களுக்கு தண்ணீர் பற்றாக்குறையாக இருப்பதால், அப்பகுதி மக்களுக்கு சிறிய மின்விசை பம்பு அமைக்க ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.3,75,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.** |
| | **அலுவலகக்குறிப்பு:** 1) **மன்றம் அனுமதிக்கலாம்.**<br>2) **மேற்படி செலவினத்தை 2022-2023-ஆம் ஆண்டு குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.** |
| | தீர்மான எண். 114 அனுமதிக்கப்பட்டது. |
| 20) | இந்நகராட்சியில் கீழ்கண்ட விவரப்படி உள்ள மின்இணைப்புகள், சிறு மின்விசை பம்புகளின் ஆழ்குழாய் கிணற்றில் போதிய தண்ணீர் இல்லாததாலும், மண் சரிந்தும் பயன்பாடு இல்லாமல் உள்ளது. இதனால் அதில் உள்ள மின் இணைப்புகளுக்கு பயன்பாடு இல்லாமல் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை குறைந்தபட்ச மினிமம் மின்கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. மேலும் பயன்பாடு இல்லாத சிறு மின்விசை மோட்டார் அறையும் சேதம் ஆன நிலையில் உள்ளது. எனவே பயனற்ற கீழ்க்கண்ட மின்இணைப்புகள் மற்றும் சிறு மின் விசை பம்புகளை நிரந்தர நீக்கம் செய்து தேவையற்ற மின் கட்டணம் செலுத்துவதை தவிர்க்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ. எண். | வார்டு எண் | இடம் | மின் இணைப்பு எண் |
|---|---|---|---|
| 1) | 01 | கண்ணுடையான் காலனி | 557 005 504 |
| 2 | 03 | வாரச்சந்தை வளாகம் மேற்கு கடைசி | 560 002 1681 |
| 3 | 07 | சுப்ரமணியசாமி குறுக்கு தெரு | 560 001 1407 |
| 4 | 09 | கம்பம் மெட்டு காலனி மேல்நிலைத் தொட்டி அருகில் | 556 004 1831 |
| 5 | 09 | கம்பம் மெட்டு காலனி மேற்கு 2வது தெரு | 556 004 1449 |
| 6 | 10 | கம்பம் மெட்டு காலனி 60 அடி ரோடு | 556 004 2687 |
| 7 | 11 | தாத்தப்பன் குளம் 19வது சந்து | 560 003 655 |
| 8 | 13 | அம்பேத்கார் தெரு | 556 013 1363 |
| 9 | 14 | செக்கடித்தெரு | 556 013 1196 |
| 10 | 15 | சுங்கம் தெரு | 556 013 1169 |
| 11 | 16 | கிருஷ்ணாபுரம் கிளப் எதிரில் | 556 004 1762 |
| 12 | 16 | கிருஷ்ணாபுரம் மேற்கு கடைசி | 556 004 2661 |
| 13 | 17 | நந்தகோபால்சாமி கோவில் முன்பு | 556 004 2323 |
| 14 | 26 | பெண்கள் பள்ளி தெரு | 556 007 1356 |
| 15 | 27 | ஏகலூத்து ரோடு மேற்கு கடைசி | 556 015 2363 |
| 16 | 28 | ராஜீவ் நகர் (வைரவன் கோவில் தெரு) | 556 015 2337 |
| 17 | 28 | ராஜீவ் நகர் மனமகிழ்மன்றம் தெற்கு தெரு | 556 015 1484 |
| 18 | 30 | ரேஞ்சர் ஆபீஸ் ரோடு மணி நகர் கிளப் வடபுறம் | 556 007 1653 |
| 19 | 33 | ஆங்கூர்பாளையம் ரோடு | 556 |
| 20 | 14 | செக்கடித்தெரு கழிப்பறை | 556 013 1117 |
| 21 | 22 | காளவாசல் வடக்கு 7வது தெரு கழிப்பறை | 556 017 161 |
| 22 | 03 | உலகத்தேவர் 6வது தெரு கழிப்பறை | 560 002 1049 |
| 23 | 26 | பூங்கா கிழக்கு பக்கம் | 556 015 2093 |

| | |
|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:** கம்பம் நகராட்சியில் பொதுமக்களின் தண்ணீர் பற்றாக்குறை அதிகம் நிலவிய காலங்களில் 1982-1983-ஆம் ஆண்டுகளில் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக நகரில் பல்வேறு இடங்களில் அடிபம்புகள் அமைக்கப்பட்டது. மேற்படி அமைக்கப்பட்ட அடிபம்புகளின் ஆழ்குழாய் கிணறுகள் 200 அடி ஆழம் கொண்டதாக அமைக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக அடிபம்புகள் அனைத்தும் சிறு மின்விசை பம்புகளாக மாற்றம் செய்யப்பட்டது. தற்போது கம்பம் நகர் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் சராசரி 250 அடிக்கும் கீழ் உள்ளதால், சிறு |

மின்விசைபம்புகள் தண்ணீர் இல்லாமல் பயனற்ற நிலையில் உள்ளது. (நந்தகோபால்சாமி நகர், காந்தி நகர், ஏகலூத்து ரோடு மேற்கு பகுதி, கிருஷ்ணாபுரம், கம்பம் மெட்டு ரோடு, கம்பம் மெட்டு காலனி, தாத்தப்பன்குளம் மேற்கு பகுதி ஆகிய பகுதிகளில் 450 அடிக்கும் கீழ் நீரேற்று குறைவான நிலையில் காணப்படுகிறது). தற்போது நகரில் பொதுமக்களுக்கு குடிநீர் நாள் ஒன்றுக்கு 135 LPCD வீதம் குறைவின்றி குடிநீர் வழங்குவதால், தண்ணீர் இல்லாத சிறு மின் விசை பம்புகளை நிரந்தர நீக்கம் செய்யவும், அதன் மின் இணைப்புகளை மின் வாரியம் மூலம் நிரந்தர நீக்க நடவடிக்கைக்கு கடிதம் அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானஎண். 115 மறுஆய்வு செய்திடும் பொருட்டு தீர்மானம் நிறுத்தி வைக்கப்படுகிறது.

21) இந்நகராட்சி வார்டு எண் 07,சுவாமி விவேகானந்தர் தெருவில் புதிதாக கட்டப்பட்டு வரும் 3.00இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டிககு,சுருளிப்பட்டி மேல்நிலை நீர் தேக்க தொட்டி மற்றும் லோயர் கேம்ப் மேல்நிலை நீர் தேக்க தொட்டியிலிருந்து வருகின்ற குடிநீரினை நீரேற்றம் செய்யும் பொருட்டு உள்ளிணைப்பு பணிகள் செய்து பொது மக்களுக்கு சீரான குடிநீர் வினியோகம் செய்திட ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ 8,00,000/–(ரூபாய் எட்டு இலட்சம் மட்டும்) குடிநீர் நிதி 2022-2023-ன்கீழ் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2022-2021ன் கீழ் மேற்கொள்ளவும் மள்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண். 116 அனுமதிக்கப்பட்டது.

22) **கம்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 டாக்டர் அம்பேத்கார் தெருவில் உள்ள நகராட்சி வசூல் மையத்திற்கு அருகில் சமுதாயக்கழிப்பிடம் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து திரு சி.முருகன் என்பவர் W.P.(MD)No.15909 0f 2022 வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே மேற்படி வழக்கின் மீது எதிர்வாதுரை தாக்கல் செய்து வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்திடவும் வழக்கு கட்டணமாக அரசு வழக்கறிஞர் திரு ஏ.கே.மாணிக்கம் என்பவரின் கேட்பின்படி ரூ.10,000/** வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு : **மன்றம் அனுமதிக்கலாம்.**

தீர்மான எண். 117 அனுமதிக்கப்பட்டது.

23) இந்நகர்மன்ற தீர்மான எண்.75 நாள்.28.06.2022-இன்படி வார்டு எண்.32, நந்தகோபால்சாமி நகர் பகுதியில் ரூ.81.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. பூங்கா அமையவிருக்கும் இடமானது அருகில் உள்ள சாலையை விட மிகவும் தாழ்வாக உள்ளதால் மழைநீர் பூங்காவிற்குள் செல்லாமல் தடுக்கும்படி Well Gravel கொண்டு சாலை மட்டத்திற்கு உயர்த்துவதற்கும், மழைநீர் சேகரிப்பு அமைப்பு மற்றும் தாழ்வாக உள்ள பகுதியை உயர்த்துவதற்கும் ரூ.9,50,000/-ம் மதிப்பீட்டிலான பணிக்கு 13.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி விவரம் | மதிப்பீட்டை விட | |
|---|---|---|---|
| | | சதவிகிதம் குறைவு | சதவிகிதம் கூடுதல் |
| 1) | திருவாளர்கள் ஏ.பி. கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.02 % | - |
| 2) | ஆர். சபீர்அலி | - | 2.73 % |

அலுவலகக்குறிப்பு : வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட திருவாளர் ஏ.பி. கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர் 0.02 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.136/2022/இ2)

தீர்மான எண். 118 அனுமதிக்கப்பட்டது.

24) இந்நகர்மன்ற தீர்மானம் எண்.80, நாள்.28.06.2022-இல் கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, திட்டப்பணி மேற்கொள்ள 13.07.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடுரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | கல்வி நிதி 2022-2023 கம்பம் நகராட்சி வார்டு எண்.10 முகைதீன் ஆண்டவர் புரம் சுங்கம் தெரு பள்ளி வளாகத் திலுள்ளசுகாதார வளாகம்பராமரிப்பு பணிக்கு | 3,50,000/- | M/s. ஏ.பி. கன்ஸ்ட்ரசன்ஸ் | - | (-) 0.03 |
| | | | ஆர். சபீர்அலி | 1.70 | - |

அலுவலகக்குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு.M/S. A.P. Constructions, ஓப்பந்ததாரர் (-) 0.03 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.136/20220இ1)

தீர்மான எண். 119 அனுமதிக்கப்பட்டது.

25) இந்நகர்மன்ற தீர்மானம் எண்.2343, நாள்.30.09.2021-இல் கீழ்காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன்படி, கீழ்காணும் திட்டப்பணி மேற்கொள்ள 13.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1) | கம்பம் நகராட்சிக்கு சொந்தமான கம்பம் மெட்டு சாலையில் உள்ள கணினி வரிவசூல் மையம் பழுது பணி பார்த்தல் | 5,00,000/- | M/s. ஏ.பி. கன்ஸ்ட்ரக்சன்ஸ் | - | (-) 0.02 |
| | | | ஆர். சபீர்அலி | 3.23 | - |

அலுவலகக்குறிப்பு : வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு.M/S. A.P. Constructions, ஓப்பந்ததாரர் (-) 0.02 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.578/2022/இ1)

தீர்மான எண். 120 அனுமதிக்கப்பட்டது.

26) தேசிய வாழ்வாதார திட்டத்தின் கீழ், கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட இடங்களில் தகுதியான சாலையோர வியாபாரிகள் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/ UPA நாள்.16.06.2022-இன்படி, 04/07/2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 05.07.2022 அன்று திறக்கப்பட்ட விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் செய்யப்பட வேண்டிய பணிகள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை |
|---|---|---|---|
| 1 | கம்பம் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சாலையோர வியாபாரிகளை பயோமெட்ரிக் முறையில் கணக்கெடுப்பு எடுத்தல் மற்றும் அவர்களுக்கு QR Code உடனான அடையாள அட்டை (ID Card) தயாரித்து வழங்குதல், விற்பனை சான்றிதழ், (Certificate of Vendors) நகர தெரு விற்பனை திட்டம் (SUP) விரிவான செயல்படுத்துதல் திட்டம் (DIP) மற்றும் MIS தரவுகளை 5 ஆண்டுகளுக்கு பராமரித்தல் | S.M. அழகுவேல் (Read trust) த/பெ. மகாராஜன், கள்ளன்காடு, மண்ணாடி மங்கலம், மதுரை மாவட்டம் - 625207 | 650/- 1 நபருக்கு |
| | | Dr.S. அருள்ஞானசேகர் (Good Hope Foundation) த/பெ. சஞ்சீவி, 50, 8வது தெரு, ஜவஹர் தெரு, திருமங்கலம், மதுரை மாவட்டம் | 600/- 1 நபருக்கு |

அலுவலகக்குறிப்பு: மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரிய திரு.அருள்ஞானசேகர் என்பவரின்ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.758/2022/இ1)

தீர்மான எண். 121 அனுமதிக்கப்பட்டது.

27) தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 2021-2022-இன்கீழ் கீழ்கண்ட சமுதாயக்கூடங்கள் ரூ.49.92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணிகள் செய்திட பார்வை 1-இல் காணும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.5990/2022/SBM, 11.04.2022-ஆம் தேதிய கடிதத்தின்படி கீழ்கண்ட சமுதாயக் கழிப்பிடங்கள் கட்டும் பணிகள் செய்திட 27.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கம்பம் நகராட்சி வார்டு எண்.3, சங்கிலி நகர் ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் பின்புறம் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல். | 24.96 |
| 1 | கம்பம் நகராட்சி வார்டு எண்.14, டாக்டர் அம்பேத்கார் தெருவில் உள்ள நகராட்சி வசூல் மையத்திற்கு அருகில் சமுதாயக் கழிப்பிடம் கட்டுதல் | 24.96 |
| | மொத்தம் | 49.92 |

மேற்காணும் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.44, நாள்.20.05.2022-இல் அனுமதிக்கப்பட்டு 27.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 31.05.2022 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டது. 3வது வார்டு சங்கிலி நகர் ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் பின்புறம் மேற்படி சமுதாய கழிப்பிடம் கட்ட திட்டமிடப்பட்ட இடம் திறந்த வெளி ஒதுக்கீட்டின் கீழ் பூங்கா அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் (OSR) என்பதால் வார்டு எண்.27 ஏகலூத்து சாலையில் மறவர் மக்கள் மன்றம் அருகில் உள்ள இடத்தில் சமுதாயக் கழிப்பிடம் அதே மதிப்பீட்டில் அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண். 122 அனுமதிக்கப்பட்டது.

28) **இந்நகராட்சியில் நீண்ட காலமாக நிலவி வந்த பொது மக்களின் குடிநீர் பற்றாக்குறையை போக்க நகராட்சிக்கென தனி கூடுதல் குடிநீர் திட்டம் சுருளிப்பட்டி ரோடு முல்லையாற்றில் உறைகிணறு அமைத்து** 23.09.2014 **முதல் நகர மக்களுக்கு குடிநீர் குறைவின்றி பம்பிங் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் திட்டத்தில் உள்ள** 8 **மின் விசை மோட்டார்களை உரிய தொழில் நுட்ப பணியாளர்களை கொண்டு இயக்குதல் பணிகளை செய்திட** 2022-2023-**ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்த பணிக்காலம்** 31.05.2022-**இல் முடியும் நிலையில் தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாத வகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின்படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல்.இராஜேந்திரன் என்பவர் தொடர்ந்து** 1 **மாத காலத்திற்கு** 01.07.2022 **முதல்** 31.07.2022 **வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும்** ESI, EPF, G.S.T உட்பட தொகை ரூ.77,000/-க்கு (ரூபாய் எழுபத்தி ஏழாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் விவரம் | மாதம் மொத்த பணியாளர் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | மாத மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 30 x 3 = 90 | 568 | 51120 |
| 2 | காவலர் 1 நபர் | 30 x 1 = 30 | 426 | 12780 |
| | | | மொத்தம் | 63900 |

**அலுவலகக்குறிப்பு** : 1) **மன்றம் அனுமதிக்கலாம்.**

2)**மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி** 2022-2023-**இன்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.** (**ந.க.எண்**.579/2021/**இ**2)

தீர்மான எண். 123 அனுமதிக்கப்பட்டது.

29) இந்நகராட்சி லோயர் கேம்ப் குடிநீர் திட்டம் ரூ.18.80 கோடி

| | |
|---|---|
| | மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தி பணிகள் முடித்து நகராட்சி வசம் 17.04.2020-ஆம் தேதி முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய மன்ற அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறிப்பிட்டுள்ள எல்.ராஜேந்திரன் என்பவருக்கு இவ்வலுவலக ந.க.எண்.1136/2020/இ2, நாள்.01.12.2020-ஆம் தேதியிட்ட செயல்முறை ஆணையில் 01.12.2020 முதல் 30.11.2021 முடிய லோயர் கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.29156/2019/DO2. நாள்.22.10.2020-ஆம் தேதிய கடிதத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் செயல்பாடுகளில் குறைபாடுகள் ஏதுமில்லாத நிலையில் தொடர்ந்து நீட்டித்து கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும் வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாதவகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின்படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல். இராஜேந்திரன் என்பவர் தொடர்ந்து 1 மாத காலத்திற்கு 01.07.2022 முதல் 31.07.2022 வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் ESI, EPF, G.S.T உட்பட தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| வ. எண். | பணியாளர் விவரம் | மாதம் மொத்த பணியாளர் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | மாத மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 30 x 3 = 90 | 636 | 57240 |
| 2 | படுகை வடிகட்டி இயக்குநர் (Fitter bed Operator) 3 நபர் | 30 x 3 = 90 | 713.70 | 64233 |
| 3 | காவலர் 12 நபர் | 30 x 12 = 360 | 385 | 138600 |
| | | | மொத்தம் | 260073 |

**அலுவலகக்குறிப்பு** : 1) **மன்றம் அனுமதிக்கலாம்**.
2) **மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி** 2022-2023-**இன்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்**.

தீர்மான எண். 124 அனுமதிக்கப்பட்டது.

30) **இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிகள் செய்திட** 13.07.2022-**ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒவ்வொரு பணிகளுக்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வீதம் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசீலனைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது**.

| **வ. எ ண்.** | **பணியின் விவரம்** | **மதிப்பீட்டு தொகை (ரூ இலட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டை விட** | |
|---|---|---|---|---|---|
| | | | | **சதவீதம் குறைவு** | **சதவீதம் கூடுதல்** |
| 1 | **இந்நகராட்சியில் வார்டு எண்.30 சின்னவாய்க்கால் ரோடு 2வது மற்றும் 3வது குறுக்கு சந்தில் குடியிருப்பு விரிவாக்க பகுதி என்பதால் குடியிருப்புகளுக்கு வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க பகிர்மான குழாய் பதித்தல் பணி** | 85,000 | M. **வேல் பாண்டியன்** | - 0.07 | - |
| | | | AP **கன்ஸ்ட்ரக்சன்** | - | 7.26 |
| 2 | **இந்நகராட்சி வாரச்சந்தை நவீன கட்டமைப்பு வசதிகளுடன் மேம்பாட்டு பணிகள் செய்வதற்கு மேற்கண்ட இடத்திற்கு** | 1,80,000 | M. **வேல்பாண்டியன்** | - 0.06 | - |

| | | | | |
|---|---|---|---|---|
| | புதிதாக PVC பைப் பதித்தல் பணி, உலகத்தேவர் 5வது தெரு, குரங்குமாயன் தெரு பெண்கள் விடுதி எதிர்புறம் பகிர்மான குழாய் பதித்தல், வார்டு 10, சுப்பிரமணிய கோவில் மற்றும் கம்பம் மெட்டு காலனி புதிதாக வால்வு பதித்தல் பணி. | | AP கன்ஸ்ட்ரக்சன் | - | 5.01 |

**அலுவலகக்குறிப்பு**: 1) **வரப்பட்ட** 2 **பணிகளுக்கான இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட, விலை விகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு**.M. **வேல்பாண்டியன், கம்பம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்**.

தீர்மான எண். 125 அனுமதிக்கப்பட்டது.

31) 2022-2023**ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கம்பம் நகராட்சியில் உள்ள பொறியியல் பிரிவு மற்றும் பொதுப்பிரிவிற்கு புதிதாக நகல் பெறுக்கி** (**ஜெராக்ஸ்**) **இயந்திரங்கள்** 2 **எண்ணம், பிரிண்டர்கள்** 2 -**எண்ணம் மற்றும் தேவையான டோனர்கள் விநியோகம் செய்யும் பணிக்கு** 13.07.2022-**அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது**.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஜெராக்ஸ்இயந்திரம் ஒன்றுக்கு தொகை ரூ | நகல்பெறுக்கி (பிரிண்டர்) ஒன்றுக்கு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | Potential Copiers,No.12, Tatabad 8th Street, 100 Feet Road, Gandhipuram, Coimbatore - 641 012. | ரூ.1,10,200/- (1 No) | 20060/- |
| 2 | CRS Technologies, 42/60, Pongiyammal Street, Opp. to KarumarryammanKovil, Rathinapuri, Coimbatore - 641 027 | ரூ.2,45,000/- (2 Nos) | 23000/- |
| 3 | AK Copier Solution, Old No.232/70, AMD Commercial Complex 4th Street, Gandhipuram, Coimbatore - 12. | ரூ.2,45,000/- (2 Nos) | 23000/- |

**அலுவலகக்குறிப்பு** : **மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய** Potential Copiers, No.12, Tatabad, 8th Street, 100 Feet Road, Gandhipuram, Coimbatore **நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்**.

தீர்மான எண். 126 அனுமதிக்கப்பட்டது.

32) **கம்பம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியினை மேற்கொள்ளும் பொருட்டு வீடுவீடாக சென்று** Vehicle Mounted Fogging Machine **வாகனத்தில் பொருத்தி பயன்படுத்தக்கூடிய பெரிய புகை மருந்து அடிக்கும் இயந்திரம் பழுதாகிவிட்டது. தற்போது டெங்கு காய்ச்சல் அதிகமாக பரவி வருவதால் வீடுவீடாக சென்று புகை மருந்து அடிக்கும் பணி துவங்க இருப்பதால், மேற்காணும் இயந்திரத்தை பழுது நீக்கம் செய்வதற்கு** 07.04.2022 - **ஆம் நாள் வரப்பெற்ற கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது**.

| வ. எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விலைவிகிதம் (இயந்திரம்ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|
| 1) | திரு.பி. ஆனந்தன் கொசு மருந்து புகை மிஷின் சர்வீஸ், சென்டர், எஸ்.பி.ஐ காலனி, வடகரை பெரியகுளம் | 48,500/- |
| 2) | திரு.எம். பாண்டி ப்ரைட் ஏஜென்சிஸ், 13ஸ்ரீ, குமரன் நகர், பி&டி காலனி பிரிவு சாலை, கவுண்டம்பாளையம், கோயம்புத்தூர். | 54,800/- |
| 3) | திரு.எஸ். ஜெகநாதன், கணேஷ் என்ஜினியரிங் ஒர்க்ஸ், 17/1டி, ஜெகநாதன் இன்டஸ்ட்ரீயல் எஸ்டேட் அத்திப்பாளையம் ரோடு, கோயம்புத்தூர். | 53,000/- |

**அலுவலகக்குறிப்பு**: 1) **வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.ஆனந்தன், பெரியகுளம் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்**.

தீர்மான எண். 127 அனுமதிக்கப்பட்டது.

| | |
|---|---|
| 33) | **கம்பம் நகராட்சி பகுதிகளில் பொது மக்களிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் சிறப்பு திட்டமான "மீண்டும் மஞ்சப்பை" நெகிழி பயன்பாட்டை தவிர்த்து மஞ்சப்பை முன்னெச்சரிக்கை விழிப்புணர்வு ஏற்படுத்திட மல்டி கலர் நோட்டீஸ்கள்**, **ஸ்டிக்கர்கள் மற்றும் கொரோனா விழிப்புணர்வு குறித்த முகக்கவசம் கட்டாயம் மல்டி கலர் ஸ்டிக்கர்கள் பிரிண்டிங் செய்து சப்ளை செய்வதற்கு**27.05.2022 **விலைப்புள்ளி கோரப்பட்டதில்**, **கீழ்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் விபரம் மேலான பார்வைக்கு வைக்கப்படுகிறது**. |

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | எண் ணம் | மதிப்பீட்டு விலை விகிதம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | நெகிழி பயன்பாட்டை தவிர்த்து மஞ்சப்பையினை பயன்படுத்தும் விழிப்புணர்வு மல்டி கலர் போட்ட ஸ்டிக்கர்கள் | கொரோனா விழிப்புணர்வு குறித்த முகக்கவசம் கட்டாயம் மல்டி கலர் ஸ்டிக்கர்கள் | மஞ்சப்பை விழிப்புணர்வு மல்டி கலர் நோட்டீஸ்கள் ( 4 பக்கம் கொண்டது) | மொத்தம் |
| 1 | TheThoothukudi District Hi-tech Printing and allied Service Industrial Co-Operative Society Ltd., Kovilpatti | 10.000/- | 1,68,000/- | 1,68,000/- | 1,47,000/- | 4,83,000/- |
| 2 | Thirunelveli District Multi Purpose Service Industrial Co-Operative Society Ltd, Thirunelveli | 10.000/- | 1,60,000/- | 1,79,200/- | 1,68,000/- | 5,07,200/- |
| 3 | Kovilpatti Small Scale Industries Service Industrial Co-Operative Society Ltd, Kovilpatty | 20,000/- | 1,73,600/- | 1,73,600/- | 1,57,500/- | 5,04,700/- |

**அலுவலகக்குறிப்பு** : 1) **மன்றம் அனுமதிக்கலாம்**.

2)**மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில்** The Thoothukudi District Hi-tech Printint and allied Service Industrial Co-Operative Society Ltd, Kovilpatti **நிறுவனத்தினரால் குறைவான விலை விகிதம் வழங்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்**.

3) **மேற்காணும் பணியின் முக்கியத்துவம் கருதியும்**, **அவசர**, **அவசியம் கருதியும் குறைவான விலை விகிதத்திற்கு வழங்கியுள்ள மேற்காணும் நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்கலாம்**.

தீர்மான எண். 128 அனுமதிக்கப்பட்டது.

**ஒப்பம்/- நெ.வனிதாநெப்போலியன்**

இடம் :கம்பம் நகர்மன்றத்தலைவர்

நாள் : 26.07.2022 கம்பம் நகராட்சி.